# Rev. Bro. J.M.Martin, FC

(Formerly: S.S.J.)



# 31st Day Remembrance

**25.09.2011**

*-By-*

**Brother S.A.I.Mathew**

1620

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சி சனசமூக நிலையம்
பொது நூலகம்
பதிவு இல.
AM/CC
02-10-19
1620
பாண்டிருப்பு, கல்முனை

Bro.S.A.I.Matthew,
159, SSJ Lane,
Kalmunai.
Sri Lanka.

2014-11-24

# அமரத்துவம் அடைந்த

## அருட்சகோதரர்.
## ஜோசப் மரியாம்பிள்ளை மார்டின்

அவர்களின்

# 31ம் நாள் (25-09-2011)
# நினைவு அலைகள்

ஆக்கம்:

## சகோதரர் எஸ். ஏ. ஐ. மத்தியூ

மறைந்த சகோதரரின் மாணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஞாபகங்கள்

Bro.S.A.I.Mathew,
159, SSJ Lane,
Kalmunai
Sri Lanka.

மறைந்த சகோதரர் மாட்டின் அவர்களை 1949ல் சந்திக்கின்றேன். அப்பொழுது நான் புனித சூசையப்பர் கல்லூரியில் சேர்ந்து கொண்ட ஆண்டு. இரண்டாம் வகுப்பில் சேர்ந்துகொண்டேன். அருட்சகோதரர் மாட்டின் அவர்கள் உயர் வகுப்புகளிலே பாடங்கள் நடாத்தியவர். எனது மூத்த அண்ணா ஜோன் சந்தனம். அவர் உயர் வகுப்பிலே கற்றுக்கொண்டு இருந்தார் அவர் இதற்கு முன்னர் நாவலப்பிட்டி புனித மரியாள் பாடசாலையிலே கல்வி கற்றவர். பின்னர் கம்பளை புனித சூசையப்பர் கல்லூரியைப் புனித வளனார் துறவற சபையினர் 1942இல் பொறுப்பேற்று சீக்கிரமே புகழ் பெற்றதன் காரணமாக எனது தந்தையார் எனக்கு மூத்த அண்ணன்மார் இருவரையும் கம்பளையில் சேர்த்துவிட்டார்.

உயர் வகுப்பிலே ஆங்கில இலக்கியத்தை எனது அண்ணன் ஜோன் சந்தனம் அவர்கள் மறைந்த சகோதரரிடம் கற்றுக் கொண்டார். பின்னாளில் சகோதரர் மாட்டின் அவர்கள் எனது அண்ணாவைப்பற்றி குறிப்பிட்ட போது "தாம் கற்பித்த மாணவர்களில் அதிசிறந்த விவேகம் கல்வி அறிவு கொண்டவர்" எனக் குறிப்பிட்டது எனக்குப் பெருமையாய் இருந்தது.

எனது அண்ணாவின் மூலம் என்னை இனம்கண்டு கொண்டார். ஆனால் என்னை அடிக்கடி தமது அறைக்குள் அழைத்துச் சென்று பழங்கள் முதலான உணவு பொருட்கள் தந்து அதனிலும் மேலாகத் தம்மிடம் இருந்த ஏராளமான ஆங்கில, தமிழ் நூல்களை வாசிக்குமாறு கூறினார். அது எனது வாசிக்கும் திறமையை வளர்த்தது, புத்தகங்களில் ஒரு பற்றை ஏற்படுத்தியது. தமிழ் இலக்கியத்திலும் ஆங்கில இலக்கியத்திலும் ஒரு பரீட்சியத்தை ஏற்படுத்தியது. அவர் எனக்கொரு வாழ்க்கை வழி காட்டியாகத் திகழ்ந்தார்.

சகோதரர் மாட்டின் அவர்கள் 1952ஆம் ஆண்டளவில் இலண்டன் பல்கலைக்கழகம் நடாத்திய B.A. பரீட்சையில் பொதுப்பரீட்சைக்கு தோற்றி B.A. Hons. Upper Division இல் சித்தி அடைந்தார். அவர் பரீட்சைக்கு தோற்றிய பாடங்கள் தமிழ் (தமிழை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்) இலத்தின், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் பரீட்சைப் பாடங்களாக கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நிரம்பிய புலமை வாய்ந்த ஒரு பேரறிஞர் ஆவார். நானறிய அவர் கற்பித்த பாடங்கள் கணிதம், உயர்கணிதம், திரிகோண கணிதம், பௌதீகம், இரசாயனம், கணக்கியல், எண்கணிதம் போன்ற பாடங்கள். பல்துறை சமய அறிவு வாய்ந்தவர். சமஸ்கிருதம், பிரேஞ்சு முதலான மொழிகளில் அவருக்குப் பரிட்சயம் உண்டு.

1960 வரை கம்பளை புனித சூசையப்பர் கல்லூரியிலே ஆசிரியராக கடமை புரிந்தார். 1961ஆம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற போது அக்கால கல்வி அமைச்சர் கலாநிதி பதுார்தீன் முகமத் அவர்களினால் அருட்சகோதரர்கள் யட்டியந்தோட்டைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு பின்னர் கல்முனை பற்றிமா கல்லூரிக்கு இடமாற்ற கல்வி அமைச்சர் துணை புரிந்தார். 1961-1980 இல் ஓய்வு பெறும் வரை பற்றிமா கல்லூரியில் சகோதரர் மார்ட்டின் அவர்கள் பணியாற்றினார்கள்.

1973இல் அருட்சகோதரர் ஆ.இமானுவேல் அவர்கள் ஓய்வு பெற்றதன் பின்னர் 1974ஆம் ஆண்டு பற்றிமா கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார். பின்னர் பற்றிமா கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்த அருட்சகோதரர் S.A.பிரான்சிஸ் அவர்களுக்கு அதிபர் பதவியை அளித்து சாதாரண உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

1978 ஜனவரி 15ம் திகதி அருட்சகோதரர் S.A.I. மத்தியு அவர்கள் பற்றிமா கல்லூரியில் அதிபராக பதவி ஏற்ற பொழுது அவர் தம் மாணாக்கர் என்றும் நோக்காது அன்னாருக்கு உதவி ஆசிரியராகவும் பணியாற்றி சகல வழிகளிலும் வழிகாட்டி உதவி புரிந்த பெருமகன் என்றே அவரைக் குறிப்பிட வேண்டும்.

1961 தொடக்கம் பற்றிமாக் கல்லூரியிலும் பின்பு 1975 மே 01ம் திகதி கார்மேல் பாத்திமா கல்லூரியிலும் அவரது ஆசிரிய நண்பர்களாக விளங்கியவர்களுள் திரு. A.R. அருளையா (B.A.Hons.), திரு K.A.G.விஸ்வநாதன், திரு K.தம்பிராஜா, திரு S.சின்னச்சாமி. திரு இக்னேசியஸ் கோயில் பரம்பில் B.Sc, திரு S.நடராஜா B.A. Hons. (இவர் இளவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பின்னாளில் பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபர்) திரு வேதநாயகம் B.Sc. திரு ஜோசப், திரு வஸ்தியான்பிள்ளை, ஆகியோராவார்கள். எளிமையானவர். எவருடனும் பழகும் ஆற்றல் வாய்ந்தவர். அவரது துறவற வாழ்வில் அவருக்கு நண்பராக விளங்கியவர் அருட்சகோதரர். A.K. பற்றிக் B.A. (லண்டன்). ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித வளனார் துறவற சபையில் 1941ஆம் ஆண்டில் இணைந்து கொண்டார் இளமையில் தாயாரை இழந்த இவர் தந்தையாரின் பராமரிப்பாலும் பின்னர் அவரின் உறவினர்களான அருட்சகோதரர் S.M. Benjamin அதி சிரேஸ்டராக விளங்கியவர், அருட்சகோதரர் A.K.ஜோசப்மேரி ஆகியோரின் அன்பிலே வளர்ந்தார். A.K.ஜோசப்மேரி கம்பளையில் பலகாலம் மடத்துத் தலைவராக பணிபுரிந்தவர்

சில ஆண்டுகள் நீர்கொழும்பில் அவரது உறவினர் வஸ்தியாம் பிள்ளை அவர்களுடன் தங்கியிருந்தார்கள். அடிக்கடி அவரது சகோதரி ஆசிரியையைச் சந்திப்பதற்கு திருகோணமலை செல்வதுண்டு. தமது ஆரம்பகாலக் கல்வியை இளவாளை புனித ஹென்றி அரசர் கல்லூரியிலும் புனித பத்திரியார் கல்லூரியிலும் கற்றவர்.

புனித வளனார் சபையில் பல்வேறு பணிகளில் அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். சபையில் அவரது வியப்புக்குரிய மனிதர் தலைமைச் சகோதரராக விளங்கிய A.M. தோமஸ் அவர்கள் எனது இளமைக்காலத்தில் கண்டி நகரைத் தரிசிக்க வேண்டும் என்று என்னை அழைத்துச் சென்றார். 1957ல் கல்முனை பற்றிமா கல்லூரியில் இடம் பெற்ற புனித வளனார் சபை நடாத்திய பாடசாலை கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டிக்கு என்னை அழைத்துச்சென்றார்.

**இந் நிகழ்வானது 1959ஆம் ஆண்டு என்னை புனித வளனார் துறவர சபையில் இணைத்து கொள்வதற்கு ஒரு வழிகாட்டியாக இருந்திருக்கலாம் என நம்புகிறேன்.**

ஒரு பிரத்தியேக மாணவனாக A/L பரீட்சைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த வேளையில் புனித மிக்கேல் கல்லூரி மாலை நேர பிரத்தியேக வகுப்புக்களில் பாடங்களை கற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில், இரண்டு வாரங்களுக்கு திருகோணமலை வெல்வெரி எனும் இடத்தில் காடு திருத்தி களனி ஆக்கிக் கொண்டிருந்த வேளையில் காட்டுப் பன்றிகளிடம் இருந்து வயல்களைக் காப்பாற்ற அனுப்பப்பட்டிருந்தேன். இருவாரப்பணி இருமாதமாக நீடித்தது. அப்போது அருட் சகோதரர் மார்ட்டின் அவர்கள் வெல்வெரியில் என்னோடு வந்து தங்கினார்கள். எங்களது உணவிற்கு பஞ்சம் ஏற்பட்டது வெல்வெரி காட்டுக்குள் நுழைந்து அங்கே ஏராளமாக விளைந்திருந்த திப்பிலி மிளகாய்களைச் சந்தையில் விற்று அப்பணத்தைக் கொண்டு நிலாவெளி, திரியாய், அநுராதபுரம் போன்ற இடங்களுக்கு சென்றோம். திரியாயில் புராதன பௌத்த சின்னங்கள் இருந்தன. திரியாய் இயேசு சபைக் குருவாகிய தியோப்பிலஸ் என்பவரின் ஊர் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுராதபுரத்தில் குறிப்பிட்ட ஒரு புத்தர் சிலையின் முன்பாக அருட் சகோதரர் மாட்டின் அவர்கள் வியந்து நின்றார்கள். ஏனெனில் அந்த புத்தர்சிலை இந்தியப்பிரதமர் ஜவஹர்லால் நேருவைக் கவர்ந்த ஒன்றாகும். மேற்கூறிய சம்பவங்களை ஒருபோதும் மறந்துவிட முடியாது.

நான் S.S.J. சபையின் தலைவராக 1992 தொடக்கம் 1997 வரை பதவி வகித்த காலத்தில் அருட் சகோதரர் மாட்டின் அவர்கள் இங்கிலாந்து செல்லவேண்டும் என்று அனுமதி கேட்டார்கள். அதற்குத் தேவையான பணத்தையும் கொடுத்து எவ்வளவு காலமெனினும் இங்கிலாந்தில் அவர்களது உறவினருடனும் பழைய மாணவர்களுடனும் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று அனுமதியை அளித்தமை எனக்கு பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. சுமார் இரண்டு ஆண்டுகள் அவர் இங்கிலாந்தில் இருந்து ஒரு நீண்ட விடுமுறையை கழித்து விட்டு வந்தது இன்னும் மகிழ்ச்சியாக இருக்கிறது. எனது கடமைக் காலத்தில் கார்மேல் பற்றிமா கல்லூரிக்குப் பிரதம விருந்தினராக அழைத்த பெருமையும் எனுக்கு உண்டு.

ஈற்றில் அவர் தமது ஞாபக சக்தியை இழந்து இருந்த வேளை மட்டக்களப்பு கன்னிகர்களால் நடத்தப்பட்ட வயோதிபர் இல்லத்தில் அவரை மூன்று தடவைகள் சென்று பார்த்துள்ளேன். என்னைப் பற்றிய ஞாபகம் அவருக்கு நிரம்ப இருந்தது.



அவர் கல்முனைக்கு வரும்போதெல்லாம் என்னைப் பார்க்காமல் செல்லமாட்டார். கம்பளை புனித சூசையப்பர் கல்லூரியில் பாடசாலை விடுகையின்போது அவர் எனது ஞாபக ஏட்டில் எழுதிய வார்த்தைகள்.

" Heart Speek Unto Heart"

**'இதயம் இதயத்தோடு பேசுகின்றது'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ் இதயம் 26.08.2011இல் எம்மை விட்டு நீங்கிவிட்டது. அப்பொழுது அவரது அகவை 91 ஆகும். சிறு நடையும் பெருநடைகளும் அவர்தம் உடல் ஆரோக்கியத்தின் இரகசியங்கள். பொன்னாங்கன்னி அவரது ஔடதம். “பொன்னாம் காண் நீ ” என்பது மூலிகை கீரைவகையின் கருத்து எனக் கூறுவார். தமிழனுக்கு ஒரு பெருமை இருக்கிறது என்பார். கடவுள் - கடந்தவர் கட்டுகளைகடந்தவர். ஆனால் உள்ளத்தின் உள்ளேயும் இருக்கிறார் இப்படி கூறுவதில். தமது தமிழ்ப் பெருமையையும் பற்றையும் வெளிக்காட்டுவார். சபையிலே அவர் ஒரு பெருமைக்குரிய துறவியாகவே வாழ்ந்து வந்தார் ஆய்வுத்திறமை கொண்டவர், தமிழ் இலக்கியங்களைத் துறைபோக கற்றவர், அவரது ஏராளமான தமிழ், ஆங்கில, லத்தின் நூல்கள் எங்கு சென்று மறைந்தனவோ? இதை என்னிடம் பலமுறை கூறி கவலைப்பட்டிருக்கின்றார்.

டான் வெஸ்கோ கல்லூரி, ஹற்றன்

## சபையில் அவரது வாழ்க்கைக் குறிப்புகள் சில...

- *1968*இல் மூன்றாவது ஆலோசகர்- *13* ஆவது பொதுச் சங்கத்தினால் தேர்வுசெய்யப்பட்டார்
- *1974* மூன்றாவது ஆலோசகர்- *14* ஆவது பொதுச் சங்கத்தினால் தேர்வுசெய்யப்பட்டார்
- *1987* மூன்றாவது ஆலோசகராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.
- *02.05.1940* இல் சபையில் சேர்ந்து கொண்டார். முழுப்பெயர் ஜோசப் மரியாம்பிள்ளை மாட்டின்
- *25.12.1945* இல் நித்திய வாக்குத்தத்தத்தை அளித்தார்.
- *30.04.1941* இல் அவருடன் சபையில் சேர்ந்து கொண்டவர்கள் வருமாரு

1. **A.R. மார்க்**
2. **G.M. ஸ்த்தீபன்**
3. **S.S. தியோப்பிளஸ்**
4. **A.R. மொன்டீன்**
5. **S.A. பிரான்சிஸ்**
6. **A.M. மாட்டீன்**

இவ்வேளை சபையில் அதி சிரேஷ்டராக விளங்கியவர். இளையதம்பி இக்நேசியஸ் கிறிசோஸ்ட்டம் அவர்களாவார். இவர் B.A. லண்டன். புனித கென்றி அரச கல்லூரி அதிபர், பின்னாளில் புனித அந்தோனியார் கல்லூரி, ரங்கூண் டொன் வெஸ்கோ கல்லூரி, ஹற்றன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித அகஸ்டின் ஆசிரிய பயிற்சி கல்லூரி மட்டக்களப்பு அதிபராகவும், புனித சூசையப்பர் சபையின் அதி சிரேஷ்டராகவும் 1938-1950 வரை பணியாற்றியவர்.

சகோதர் மார்டின் அவர்களுக்கு யான் எழுதிய திருத்தூதர் பணி என்ற G.C.E. (A/L) பாடத்திட்டத்திற்கு ஒரு விளக்க நூலினை சமர்ப்பணம் செய்துள்ளேன். மேலும் எனது கலாநிதி ஆய்விற்கு அவர் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருந்தார். அதனை இட்டு அந்த ஆய்வு நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளேன்.

"Very Valuable corrections, Advices and Informations were given" by Bro. J.M. Martin. S.S.J. B.A .Hons. London, My respected teacher and guide for this study (1999)





பிறந்த திகதி: **சகோதரன் மார்டின் 20.07.1920இல் பிறந்தார்**

சபையில் சேர்வு: **1940** இறப்பு: **26.08.2011**

இறந்த இடம்: **ஏழைகளின் சிறு கன்னியர் வயோதிபர் இல்லம், திருமலை வீதி, மட்டக்களப்பு**

நல்லடக்கம்: **கல்முனை சேமக்காலை (27.08.2011)**

Bro.S.A.I.Matthew,
159, SSJ Lane,
Kalmunai.
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை மடத்துச் சிரேஷ்டர், பாண்டிருப்பு இல்ல பராமரிப்பு பாண்டிருப்பு வளர்முக சந்நியாச தலைவர் "Scholastic Master (1962-63)



2010இல் சகோதரர் J.M.மார்ட்டின் அவர்களுக்கு
சகோதரர் S.A.I. மத்தியு அவர்கள் எழுதிய
நூலொன்று அன்பளிப்பு செய்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bro.S.A.I.Matthew,
159, SSJ Lane,
Kalmunai.
Sri Lanka.

மறுமலர்ச்சி சனசமூக நிலையம்
பாண்டிருப்பு
பொது நூலகம்
பதிவு இல.
AM/CC
02-10-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org